www.tamilarangam.net

# நமது குரல்

கீதா







சித்திரை 1989 வெளியீடு 15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளடக்கம்


நாம் சிறிது பேசுவோம் ..................... 3

கலைஞனிடமிருந்து ..................... 5

கவிதை ..................... 7

இலக்கியச் சந்திப்பு ..................... 8

சித்திரா- ஒரு பெண் ..................... 11

இலங்கையின் ..................... 15

அதிசய விளம்பரம் ..................... 17

சிறுவர் களஞ்சியம் ..................... 18

புத்தாண்டு ..................... 20

தண்டனை ..................... 21

அகதியின் பரிதாப முடிவு ..................... 31

வாசகர் கடிதம் ..................... 34



Kirchenkreis Herne

INFORMATION ZENTRUM.
DRITTE WELT

Arbeitsstelle für Frieden
Gerechtigkeit und
Bewahrung der Schöpfung
Overweg Str 31
4690 Herne 1.
Tel. 02323 496970/74

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறிது பேசுவோம்

## ஏன் தயக்கம்?

தமிழர் நாகரீகம் பழமை வாய்ந்தது என்று பெருமை பட்டுக் கொள்கிறோம். அந்தப் பெருமையை மேலும் மெருகூட்டி அந்த நாகரீகம் பாதிக்கப் படாமல் பெருமை அடையச் செய்வதில் தமிழர் அவ்வளவாக முன்னேறவில்லை என்றுதான் குற்றஞ் சாட்ட தோன்றுகிறது.

தமிழ் இலக்கியம், வாழ்க்கை முறை, உரிமை போன்றவற்றில் தமிழ் பெண்களின் பங்கு, இங்கு பின்னடைந்ததாகத்தான் இருக்கிறது. எவ்வளவோ படித்த பெண்கள் இருந்தும் சமூக வேலைகளில் கலந்து கொள்ள தயங்குகிறார்கள்.

மிகவும் மதக் கட்டுப்பாடுகளைக் கொண்ட இஸ்லாமிய பெண்களின் சமூக கட்டுக் கோப்புகளையும், நீதியையும் எழுத்துக்களில் அடக்க முடியாது. அதில் பாகிஸ்தானில் ஆளும் இஸ்லாமிய பெனசீர் பூட்டோ, சாதனையாளர்களில் ஒருத்தியாக முன்மாதிரியாக நடந்து கொண்டிருக்கிறார் என்றால், அவரது சமூக நலத்தின் அபிலாசைகளையும் அனிச்சலையும் அளவிட முடியாது.

ஆண்களுக்கு சரிநிகர்ராக சமூக வேலைகளில் ஈடுபட பெண்கள் முன்வர வேண்டும். ஆண்கள் பெற்றுத்தரும் போராட்டங்களின் விளைவுகளை அறுவடை செய்து அனுபவிக்கும் நிலையில் இங்கு பெண்கள் இருக்கக் கூடாது. பேச்சு சுதந்திரம் உள்ள இந்நாட்டில் எம்மால் செய்யக் கூடியது, இலங்கையைவிட [illegible] கூடுதலாக உள்ளது.

அகதி அந்தஸ்து கோரும் சட்டம் தமிழருக்கு வாய்ப்பாக அமையவில்லை. மூடி மறைப்புகள் அடங்கியுள்ளன. இலங்கை அரசாங்கத்தால் தமிழருக்கு அரசியல் பாதிப்பு இனிமேல் இல்லை என்று கருதப்படுகிறது. மேலும் அந்த அரசாங்கத்தால், தமிழர் இலங்கையின் எந்தப் பாகத்தில் வாழ்ந்தாலும் பாதுகாப்பு

தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுக்க முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இவ்வளவுக்கும் எதிரான கருத்துக்கு ஆதாரமான நடவடிக்கைகள் அங்கு நடந்து கொண்டிருக்கின்றன. கடவுள் விடைகொடுத்தும் பூசாரி இணங்காத நிலையில் தமிழ் மாகாணசபை கேலிக்குரியதாக ஆக்கப்பட்டுள்ளது. அச்சபை அரசியலாளர் மீண்டும் துப்பாக்கி ஏந்தும் விரக்தி நிலைக்கு மெதுமெதுவாக நகர்த்தப்படுகிறார்கள்.

இந்த சீரழிவு நிலையை எடுத்துக்காட்டுவதற்கு இங்குள்ள பொதுநல அமைப்புகளின் உதவி தேவை. இவ்வுதவிகளை பயன்படுத்த ஆங்காங்கே தமிழ் பெண்கள் அமைப்புகள் கணிசமான உறுப்பினர்களுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றின் உறுப்பினர் தொகை கூட வேண்டும். பெண்கள் வீட்டுக்குள் அடைந்து, மூளையின் சக்தியையும் நேரத்தையும் வீணடிப்பதில் நாட்டங்கொள்ளாமல் வீட்டு வேலைகள் தவிர்ந்த நேரத்தை எவ்வாறு தங்களின் திறமைகளை பயன்படுத்தலாமோ அவ்வாறு செயல்களில் காட்டலாம். தங்களது திறமைகளை அறியாத பெண்கள் இவ்வமைப்புகளின் ஆலோசனையைப் பெறுவதன் மூலமாக திறமையைப் பயன்படுத்தலாம்.

இங்கு அகதிகளாக வந்த பலருக்கும் தாழ்மையுணர்வு! வேலை செய்வதன் மூலமாக அல்லது அவ்வேலைகளை விரும்பாதவர்கள் இவ்வமைப்புகளில் சேர்ந்து தமது சமூகத்திற்கு சேவை செய்வதன் மூலமாக அந்த தாழ்மையுணர்வை தகர்த்து சமூகத்திற்கும் வீட்டுக்கும் பயன்பட்டவர்களாக திகழலாம். தமிழ்ப்பெண்களே! சும காலத்திற்கு ஏற்றமாதிரி உங்கள் சிந்தனையைத் தி[illegible] திருப்புங்கள்.

இவ்வளவு காலமாக ஆதரவு தந்து கொண்டிருக்கும் வாசகர்களுக்கும் இலக்கிய உலகத்துக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

o o o o o o o o o o o o o

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கலைஞனிடமிருந்து ஒரு கடிதம்.....

எனதன்பின் இசைப்பிரியர்களே,

ஈழத்தில் ஆயிரக்கணக்கான மேடை நிகழ்ச்சிகள் மூலமும், இலங்கை வானொலி மூலமும், ஒரு இசையமைப்பாளனாக உங்கள் முன் அறிமுகமான நான் எனது பல கால சிந்தனைக்கு கருத்து வடிவம் கொடுப்பதன் மூலம் மீண்டும் இந்த சர்வதேச சங்கீத சுரத்தட்டு வயிலாக உங்களுடன் கலந்து கொள்கின்றேன்.

ஈழத்தில் இசைக்கலை வளருமா? என்ற சந்தேகம் கொண்டு பார்த்தவர்கள், ஈழத்தில் தரமான பாடல்களை உருவாக்க முடியாது, என்று உறுதிகொண்டிருந்தவர்கள், அநேகர். பிறநாட்டுப் பாடல்களின் எழுச்சியைக் கண்டு மெய்மறந்து ரசித்தவர்கள், நம் நாட்டிலும் அத்தகைய பாடல்களை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையை அடியோடு இழந்திருந்த காலம் அது. ஈழத்து தமிழ் மெல்லிசை உலகம் இருட்டடிக்கிடந்த காலம் அது.

இப்படி ஒரு கால கட்டத்திற்தான் ஈழத்தின் முதலாவது தமிழிசைத்தட்டினை 1971 ம் ஆண்டில் நாம் சுழல விட்டோம். இதைத் தொடர்ந்து இலைமறைகாயாய் இருந்த பல பல கலைஞர்கள் வெளிச்சத்திற்கு வந்தனர். ஈழத்திலும் தரம்மிக்க கலைஞர்கள் உள்ளனர் என்பதும் உறுதியாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து படிப்படியாக இலங்கை வானொலியிலும் ஈழத்துக் கலைஞர்களும் ஊக்குவிக்கப்பட்டனர். ஆனாலும் ஒரு சிலரைத் தவிர பலரும் கேள்வி ஞானத்திலேயே தம் இசை அறிவை வளர்த்துக்கொண்டனர். இவர்கள் அனைவரும் சங்கீதத்தை முறைப்படி கற்க விரும்பாமல் அல்ல, ஆனால் சந்தர்ப்பம், சூழ்நிலை, நல்ல சங்கீதத்தினை படிக்கும் வாய்ப்பு எல்லோரிற்கும், கிடைப்பதில்லை. இப்படி கேள்வி ஞானத்தில் தம் இசை அறிவை வளர்த்திருக்கும் இசைக்கலைஞர்கள் அனைவரும், இன்னும் புதிதாக உருவாக்கப்படும் கலைஞர்களும், எமக்கென்றொரு புதிய பாணியை, எமக்கென்றொரு இசைமுறையை வகுத்துக்கொள்ள வேண்டும், அதுவும் இலகு முறையில் அமையவேண்டும். என்ற ஒரே நோக்கத்துடனேயே தான் இந்த இத்தாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்த சர்வதேச சங்கீத முறையினை எமது பாரம்பரிய சங்கீதமான கர்னாடக இசையையும் ஆதாரமாகக் கொண்டு இந்தப் புத்தகத்தினை எழுதியுள்ளேன்.

கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு, அதிலும் இசைக்கலையைப் பொறுத்தவரையில் இதனை இன்னுமொரு படி மேலே கொள்ளலாம். இசைக்கலை ஒரு கடல் போன்றது. இதனை, இந்த இசைக்கடலை முற்றாக தாண்டியவர் எவருமே இல்லை எனலாம். அதிலும் தமிழர்கட்கே உரித்தான கர்னாடக சங்கீதம் ஒரு பெரும் கடல் போன்றது. அதன் ஆழத்தைக் காண யாராலும் முடியாது. இப்படிப்பட்ட சங்கீதத்தினை, இதன் மகத்துவத்தினை சாதாரணமாக ஒரு இசை முறையை பயில்பவர்களும் ஓரளவு அறிந்திருக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடனேயே இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளேன். இதே போல் சர்வதேச சங்கீத முறையினையும் ஒரு சாதாரண இசை முறை என்று சொல்ல முடியாது. இங்கும் ராகங்களும், தாளங்களும் வெகு நுட்பமாக கையாளப்பட்டுத்தான் வருகின்றன. ஆனால் பல மணி நேரம் செலவு செய்து, செய்யும் ஒரு வேலையை கொம்பியூற்றர் மூலம் கணப்பொழுதில் செய்வது போல், அத்தனை நுட்பங்களையும், பயில்வதற்கு இலகுவான முறையில் இந்த சர்வதேச சங்கீத முறை அமைக்கப்பட்டுள்ளது. ஆயினும் கர்னாடக சங்கீதத்தில் உள்ள ராகங்கள், தாளங்கள், இவற்றின் மகிமை உலகத்தில் உள்ள எந்த இசை முறையிலும் இல்லை என்பதை ஆணித்தரமாகக் கூறலாம். ஆகவே தான் இந்த மகிமைகளை சகலரும், அதாவது சாதாரணமாக ஒரு வாத்தியத்தினைப் பயிலும் ஒருவர் கூட, அறிந்திருக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்தான் நான் இந்த முயற்சியில் இறங்கியுள்ளேன். இநத எனது முயற்சி பூரணத்துவம் அடைய காலம் பல ஆகலாம், ஆனால் நான் எழுதிவரும் இந்த இசை முறை பிற்காலத்தில் நல்ல பல கலைஞர்கள் உருவாவதற்கு வழிகோலும் என்பதை நிச்சயம் நம்புகின்றேன்.

மேற்படி நான் எடுத்துக்கொண்டுள்ள இந்த முயற்சி மூலம் கண்டிப்பாக பல பல புதிய கலைஞர்கள் உருவாக்கப்படுவார்கள். கேள்வி ஞானத்தில் தம் இசை அறிவை வளர்த்திருப்பவர்களும் நல்ல கலைஞர்கள் ஆவார்கள் என்பது உறுதி. ஒரு ஆசிரியரின் துணையின்றி தாமாகவே ஒரு சுரத்தட்டினை பயிலக் கூடிய விதத்தில் மிகவும் இலகுவாகவும், தனித்தனி விளக்கங்களுடனும் இந்த எனது முதலாவது பாகத்தினை எழுதியுள்ளேன். ஒவ்வொரு புத்தகத்துடனும் அப்புத்தகத்தில் உள்ள பாடல்கள் அடங்கிய ஒவ்வொரு ஒடியோக் கசட் இணைக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஒடியோக் கசட்டினதும் உதவியைக் கொண்டு நீங்கள் வெகு விரைவில் வெகு எளிதில் இந்த இசை முறையை கற்றுணர்ந்து கொள்ளலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்படி நாம் எடுத்துக்கொண்டுள்ள முயற்சி முழு வெற்றியடைவதற்கு உங்கள் அன்பும் ஆதரவும் கண்டிப்பாக எனக்குக் கிடைக்குமென நம்புகின்றேன். எனது கடந்த 20 வருட இசை அறிவிற்கு சிந்தனை கொடுத்தே இந்த சர்வதேச சங்கீத சரத்தட்டு என்னும் நூலை எழுதியுள்ளேன்.

ஈழத்தில் நான் இருந்த போது என்னால் இயன்ற சேவைகளை தமிழிற்கும், தமிழ் இசைக்கும் ஆற்றியுள்ளேன். அதன் பின் மேற்கு ஜேர்மன் வந்தும் என்னால் இயன்ற சேவைகளை தமிழிற்கும் தமிழ் இசைக்கும் ஆற்றியுள்ளது உங்கள் எல்லோருக்கும் தெரிந்த உண்மை. எனது முயற்சியின் ஒரு பகுதியாக மேற்கு ஜேர்மனியில் நொயிஸ் நகர் வாழ் மக்களுடன் இணைந்து ஆரம்பித்த "அரங்கேற்றம்" பாடசாலையிலே இன்று சுமார் அறுபது பிள்ளைகள் கல்வி பயில்கின்றனர். அங்கு ஏழு ஆசிரியர்கள் கடமை ஆற்றுகின்றனர். எமது பாரம்பரிய கலைகளான பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம் போன்ற பாடங்கள் முறைப்படி கற்பிக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. கடந்த 15 வருடங்களாக இங்கு தமிழ் மக்கள் வாழ்ந்தும் இந்த சுற்றாடலில் வாழ்ந்து வரும் தமிழ்ப் பிள்ளைகள் ஒரு தமிழ்ப் பாடசாலை இல்லாது கஷ்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் இன்று இந்த "அரங்கேற்றம்" பாடசாலை "அல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி" இருக்கும் இந்த வேளையிலே இதனை முறியடிக்க ஒரு சில தீயசக்திகள் தந்துவரும் இடையூறுகள் கொஞ்சமல்ல. இத்தனை கஷ்டங்களையும் தாங்கி, வளர்ந்து வரும் இந்த "அரங்கேற்றம்" பாடசாலைக்கு சகல ஜேர்மன் வாழ் தமிழ் மக்களும் ஒத்துழைப்புத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நான் எனது 16 வது வயதில் பள்ளி மாணவனாக இருந்த காலத்திலேயே இந்த இசை உலகத்தில் காலடி எடுத்து வைத்தேன். நான் இன்று உங்கள் முன் ஒரு சிறந்த இசைக் கலைஞனாகத் திகழ்வதற்கு முதல் காரணமாக இருந்து, எனது முயற்சிகளிற்குனிற்குத் தடைபோடாது, மேலும் ஊக்கம் தந்து என்னை ஒரு நல்ல கலைஞனாக்கிவிட்ட எனது தந்தை காலஞ்சென்ற திரு. விபுல பீதாம்பரன் அவர்கட்கும் எனது காலஞ்சென்ற தாயாரிற்கும் நான் என்றும் கடமைப்பட்டவனாவேன். அத்துடன் எனது 16 வயது முதல் எனக்கு குருவாகவும், வழிகாட்டியாகவும் இருந்து எனது சகல முன்னேற்றத்திற்கும் காரணமாக இருந்த பொலிஸ் இசைப்பிரிவைச் சேர்ந்த திரு. பப்பா மிங்கின், எனக்கு கர்நாடக சங்கீதத்தினை புகட்டிய சங்கீத பூசணம் திரு. சங்கரலிங்கம், சங்கீத பூசணம். திரு. செல்வராஜன் அவர்களும் எனது முன்னேற்றத்திற்கு ஒரு முக்கிய காரணகர்த்தாக்களாவர்.

இன்று நான் உங்கள் முன் ஒரு நல்ல இசைக்கலைஞனாகத் திகழ்கின்றேன் என்றால் அது எனக்கு என்ன இன்று நேற்றுக் கிடைத்த பூகமா? விதை போடாது முளைத்த விருட்சமா? எத்தனை ஆண்டுகள், எத்தனை கஷ்டங்கள், அத்தனையையும் தாண்டித்தானே இன்று நான் உங்கள் முன் இன்று ஒரு இசைக்கலைஞனாகியுள்ளேன். நான் ஒரு இலட்சியவாதியே தவிர நான் ஒரு அரசியல்வாதி அல்ல. எனது இலட்சியம் தமிழும், தமிழ் இசையுமாகவே தொடரும்.

தாய் நாட்டில் ஒரு இசைக்கலைஞனாக வாழ்ந்த நான் மேற்கு-ஜேர்மன் வந்தும் எனது கொள்கைகளை மாற்றவில்லை என்பது நீங்கள் அறிந்ததே. இனியும் எனது கொள்கையில் எனது இலட்சியத்தில் இருந்து மாறப்போவதும் இல்லை. இன்னும் எனது எதிர்கால முயற்சிகள் யாவும் தமிழும் தமிழ் இசையுமாகவே தொடரும் என்று உறுதி கூறுகின்றேன். எனது அடுத்த எந்த முயற்சிகளும் எந்த அரசியலிற்கு உட்பட்டதாயோ அல்லது அதே நேரம் எந்த அரசியல் சக்திகளிற்கு எதிரானதாகவோ அமையாது என்றும் உறுதி கூறுகின்றேன். கலைஞர்கள் ஒரு சுதந்திரப் பறவைகள். குடத்திற்குள் இருக்கும் விளக்கின் ஒளி வெளியில் தெரியுமா? இதை உணர்ந்து கலைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிக்கொணரவேண்டும். உலகத்தில் உள்ள அனைத்து சக்திகளிற்கும் அப்பாற்பட்டதே இந்தக் கலை. இந்தக் கலையை கட்டுப்படுத்த முனைவது மடமை. முற்றும் கற்ற கலைஞனிலும், தான் கற்ற கலையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்கத்தவறின் அவனின் திறமைகள் அழிக்கப்படுவது திண்ணம். தமிழையும், தமிழ் இசையின் வளர்ச்சியையும் விரும்பும் எந்தத் தமிழனும் நிட்சயம் இந்த அழிவை வரவேற்கமாட்டார்கள் என நான் பூரணமாக நம்புகின்றேன்.

கலை உலகம், அது யாரிற்கும் பொதுவான ஒரு தனி உலகம். இங்கு சாதி, சமயம், மொழி என்ற பேச்சிற்கே இடம் கிடையாது. இந்தக் கலை உலகத்தினில் ஒரு இசைக்கலைஞனாகப் பிறந்த எனது கொள்கைகளும், இலட்சியங்களும் இதற்கமையவே தொடரும். இந்த எனது பாதையில் நான் அமைத்த ஒரு பெரிய படியே. இந்த சர்வதேச சங்கீத சரத்தட்டு. இந்த எனது முதலாவது பாகத்திற்கு நீங்கள் ஒவ்வொருவரும் எனக்கு அளிக்கும் பங்கும், அடுத்து நான் உங்களிற்கு அளிக்கப்போகும் இசைப் பாலங்களாக அமையும் என்று உறுதி கூறுகின்றேன். இதனைத் தொடர்ந்து நான் எடுத்து வரும் சகல முயற்சிகளிற்கும் உங்கள் அன்பும் ஆதரவும் நிட்சயம் எனக்குக் கிடைக்கும் என்ற முழு நம்பிக்கையோடு உங்களிடமிருந்து விடைபெறுகின்றேன்.

என்றும் உங்கள் அன்புக்கலைஞன்
எம். பி. கோணேஸ்

24.3.1989.
மேற்கு ஜேர்மனி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆழியின் சுவடுகள்

அன்று
எமது வீட்டுக் குடிசையின்
முத்தத்தின் மணற்பரப்பில்
பால் நிலவைப் பார்த்தேன்.
தென்னங்கீற்றினிடையே – நிலவு
துளி நிலத்திற் கோலமிட்டது.
உயர்ந்த வீடொன்றின் நிழலோ
என்னருகே உயர்ந்திருந்தது.
நானும் பார்த்தேன்,
என் குடிசையின் நிழலோ,
என் கண்முன்னே – வறுமையின்
ஏளனத்தைக் காட்டியது.
இன்று,...
இதே தரையில் அதே நிலவில்
இன்னும் நானிருக்கின்றேன்,
அருகிருந்த வீடோ,
ஆவென்று பிளந்து
ஆகாயத்தைப் பார்த்திட,
நிலவின் நிழலில் அவ்வீடோ
முறிவுபட்ட உருவமே.
"ஷெல்" விழுந்து
பொசுங்கி உருச்சிதைந்தும்
குண்டுபட்டு உரு
குதறுண்ட கோலம்
இவ்வீடு மட்டும்தானா? ?
இன்னும் எத்தனை யெத்தனையோ?...?
எண்ணிப் பார்க்கிறேன்
எண்ணமுடியவில்லை...
தொடர்ந்து நீள்கிறது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கியச் சந்திப்பு

மேற்கு ஜேர்மனியில் வெளியாகும் சஞ்சிகைகளின் ஆசிரியர்களும் ஆக்கதாரர்களும், வாசகர்களும் சந்தித்துக் கொள்ளும் இலக்கியச் சந்திப்பின் பத்தாவது சந்திப்பு 18.3.89 அன்று நொயிஸ் நகரத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சஞ்சிகை ஆசிரியர்கள், ஆக்கதாரர்கள், வாசகர்கள் எல்லோருமாக 60 க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் புதுமை, தூண்டில், வெகுஜனம், சிந்தனை, ஏலையா, தேனீ ஆகிய சஞ்சிகைகள் கலந்து கொண்டன. திரு. சிறீ உதயகாந்தனின் ஆரம்பவுரையுடன் இந்நிகழ்ச்சி காலை 10.05 மணியளவில் ஆரம்பமானது. அதைத் தொடர்ந்து திரு. [illegible] சென்ற இலக்கியச்சந்திப்புப் பற்றிய விமர்சன அறிக்கையொன்று வாசிக்கப்பட்டது. அதையடுத்து சுய அறிமுகம் என்ற பகுதி ஆரம்பமானது.

சஞ்சிகை ஆசிரியர்கள் கருத்து என்ற பகுதியில் ஏலையா சார்பில் திரு. முருகதாஸும், தேனீ சார்பாக திரு. ஜெமினியும், சிந்தனை சார்பாக திரு. சிவராஜாவும், வெகுஜனம் சார்பாக திரு. சுகிரிப்பிள்ளையும், தூண்டில் சார்பாக திரு. பார்த்திபனும், புதுமை சார்பாக திரு. பாரதிதாசனும் கருத்து தெரிவித்தனர்.

வாசகர் விமர்சனம் என்ற பகுதியில் பல வாசகர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். பல சஞ்சிகைகளை வெளியிடாமல் எல்லா சஞ்சிகையாசிரியர்களும் ஒன்றுசேர்ந்து ஒரு சஞ்சிகையை வெளியிட வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அந்த கருத்துக்கு பதில் கருத்தாக ஒவ்வொரு சஞ்சிகைக்கும் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றபடியால் ஒரு சஞ்சிகையை வெளியிடுவது சாத்தியமில்லை என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல சஞ்சிகைகளினூடாக நல்ல கருத்துக்கள் வெளிவந்தாலும் சில கருத்துக்கள்
மக்கள் மீது திணிக்கப்படுகின்றனவெனவும், சஞ்சிகைகள் தமக்குள் மோதிக் கொ
ள்வது என்று தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு பதில் கருத்தாக பல கருத்துக்கள்
வெளிவந்தால் தான் பல விடயங்களை அறியக்கூடியதாகவிருக்கும் எனவும்,
சஞ்சிகைகள் தங்களுக்குள் மோதுவது குரோத உணர்வோடு அல்ல, பகிரங்க
மான கருத்துப்பரிமாறலே செய்கின்றோம் எனவும், சஞ்சிகைகளுக்கு விமர்ச
னம் அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டது. இங்குள்ள சில சஞ்சிகைகள் உண்மை
க்கு மாறான செய்திகளை வெளியிடுகின்றன. இங்குள்ளவர்களை "பேயர்கள் மட
யர்கள் "என நினைத்து எழுதுகின்றார்கள் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.
எந்த சஞ்சிகைகள் என குறிப்பிடாதபடியால் சஞ்சிகையாசிரியர்களால் பதில
ளிக்க முடியவில்லை. அதுவும் இங்கு வெளிப்படையாக கருத்து தெரிவிப்பவர்களு
க்கு எதிராக அராஜக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதா? என்ற கேள்வி
எழுப்பப்பட்டது.

மதிய போசனத்திற்குப்பின் நிகழ்ச்சிநிரலில் இடம்பெற்ற சில
நிகழ்ச்சிகள் இடம்பெறாத காரணத்தினால் அந்த நேரத்திற்கு சர்வதேச பெண்
கள் தினத்தையொட்டி பெண் ஒடுக்குமுறையைப் பற்றி பேசுவதற்கு நேரம்
ஒதுக்கப்பட்டது. அதில் பல பெண்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.
சஞ்சிகைகளில் வெளியான பெண்கள் சம்பந்தமான கதை, கட்டுரைகள் விமர்
சிக்கப்பட்டன. பெண் வாசகர்கள் குறைவாக காணப்பட்டபோதிலும் பெண்
ஒடுக்குமுறையைப் பற்றி கலந்துரையாடியது பல விடயங்களை அறியக்கூடியதாக
விருந்தது.

திரு. கோணேஸால் எழுதப்பட்ட "சர்வதேச சங்கீதச் சுரத்
தட்டு" என்ற புத்தகம் வெளியிடப்பட்டது.

எதிர்கால ஆலோசனைகள் என்ற பகுதியில் திரு. அன்னராஜா
மேற்கு ஜேர்மன் கல்விச்சேவையைப்பற்றி பேசினார். இலக்கியச்சந்திப்பிற்கான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிர்வாகக்குழுவொன்று அவசியமில்லையெனவும், ஒவ்வொரு இலக்கியச்சந்திப்பிலும் ஒரு இடைக்கால குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டு அடுத்த இலக்கியச் சந்திப்பு நடைபெறும்வரை அதன் பதவிக்காலம் நீடிக்குமெனவும் தீர்மானிக்கப்பட்டது. அடுத்த இலக்கியச்சந்திப்பிலிருந்து சிறந்த சிறுகதை, கவிதை, கட்டுடுரைஎன்பவற்றுக்கு பரிசுகள் வழங்கப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. அடுத்த இலக்கியச்சந்திப்பு ஸ்ருட்காட்டில் நடைபெறுமெனவும், அதற்கான செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இறுதிநிகழ்ச்சியாக கவிஞர் சேரனின் கவிதா நிகழ்வு நடைபெற்றது. அதில் அவரது நான்கு கவிதைகள் வாசிக்கப்பட்டன. அந்நிகழ்ச்சி எல்லோரினதும் மனங்களையும் கவர்ந்தது. அன்றைய சந்திப்பு திரு. ஸிவலோகனின் நன்றியுரையுடன் முடிவடைந்தது.

இது போன்ற இலக்கியச் சந்திப்புக்களால் சஞ்சிகைகளின் ஆசிரியர்களும், வாசகர்களும் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் பல விடயங்களில் தெளிவை ஏற்படுத்திக் கொள்ளக் கூடியதாகவுமுள்ளது.

— உமா —

## ஏழு இசை வித்தியாலயம்.

பாடசாலை ஆரம்பம் : 27.4.89.

நடைபெறும் நாட்கள் : சனி, ஞாயிறு கிழமைகளில்

ஆசிரியர் : வி. எஸ். செல்வராஜா (டிப். இன். மியூசிக்)

தொடர்பு விலாசம் : Tiefe str.17<br>4600 Dortmund.1.<br>West-Germany Tel-0231-831863

கர்நாடக சங்கீத வாய்ப்பாட்டு— இவ்வகுப்புகளில் 7 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் கலந்து கொள்ளலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சித்திரா=பெண்

3

பார்த்திபன்

என்றே வரும் புயலுக்குத்
தடை போட
சிலை வடித்த சிற்பிகளே
இன்னும் வடிக்கிறார்கள்
கண்ணீர்.

போர்க் குணம் ததும்பிய
பொற்குடம் ஒன்றைச் சுமந்துகொண்டு
ஏன்
மண் குடமாய் இவள்
மண்ணில் சிதறுகிறாள்?

ஒரு உயிருள்ள உண்மையை
உச்சரிக்கிறேன்.
முந்தானைக்குள் முணங்கிக் கொண்டிருப்பது
அணுங்குகள் அல்லவே.
அணுகுண்டுகள்.
அவசியப்பட்டால்
வெடித்துச் சிதறி
வேலிகளையே பெயர்த்து விடும்.

— சிவம் —

'உஸ்' என்று பெருமூச்சு விட்டபடியே அம்மா கதவைத் திறந்து கொண்டு வந்தாள். கையில் ஓரளவு கனமான பை இருந்தது. சாம்பல் நிறச் சேலை அணிந்திருந்தாள். தலையில் பொய்யும் சேர்க்கப்பட்டு சின்ன மேடாக முடிச்சுப் போடப்பட்டிருந்தது. காலில் இனித் தேயத் தயாரில்லாத செருப்புகள்.

அம்மாவைக் கண்டதும் தவமணி மறுபடி உடலைச் சரித்துபாதியாக கட்டில் கம்பியில் சாய்ந்தாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


"களைக்கப் போய் வாறியள். பஸ்ஸுக்க சனமோ?"

"வரிப்பட்ட சனம். அடையடையெண்டு அடைஞ்சுகொண்டு வந்தாங்கள்." என்றபடியே அம்மா பையிலிருந்து இடியப்பப் பொதி, சொதிப் போத்தல், இலைகளைக் குலைத்துச் செய்த ஒரு பத்தியம் என்று பொருட்களையெடுத்து அலமாரியில் வைத்தாள்.

'பாவம் அம்மா. இந்த வயசில இப்பிடி அலைக்கழிய வேண்டியிருக்குது.' எனத் தவமணி பரிதாபப் பட்டுக் கொண்டாள்.

"பிள்ளையள் என்ன செய்யுதுகள்? கும்மாளமடிக்குதுகளோ?"

"மூத்தவன்தான் குளப்படி. தலையில எண்ணை வைக்க விடான். குளிக்க வாக்கிறன் வாடாவெண்டா வரான். தன்ரைபாட்டில போய் காக்காக் குளிப்புக் குளிச்சிட்டு வாறான். ஒழுங்காத் துடைக்கவும் விட மாட்டான். அவன் தொட்டாச் சிணுங்கி. இவனும் சும்மா கிடக்காம அவனோட சேட்டைவிட்டு அழப் பண்ணிக் கொண்டிருப்பான்" அம்மா நிறுத்தாமல் சொல்லிக் கொண்டிருந்தாள்.

தவமணிக்கு ஆத்திரம் வந்தது. போய் நாலு மொத்துமொத்த வேண்டும் போலிருந்தது. கணவன் மேலும் கோபம் பாய்ந்தது. 'அதுகள் குளப்படி செய்ய இவரென்ன பாத்துக்கொண்டு நிக்கிறவர்? அதுசரி. அவரெப்ப அக்கறையா இதுகளைக் கவனிச்சவர். விடிய எழும்பி வேலைக்குப்போய்வாறதும், வந்தா பேப்பர் பாக்கிறதும், சாப்பிடுறதும் தானே வேலை. பிள்ளையள் எக்கேடுகெட்டா அவருக்கென்ன?'

"என்னவேன் வத்தித் தரவே?" அம்மா அக்கறையாகக் கேட்டாள்.

"வேண்டாம். இப்ப கொஞ்சத்துக்கு முந்தித்தான் குடிச்சனான். பசியுமில்ல. சாடையாய் குத்தும் தொடங்கியிருக்கு"

"அப்பிடித்தானிருக்கும். அருவருப்புப்பட்டு சாப்பிடாதை. பசிக்கேக்க சாப்பிடு" என்றபடி அம்மா பாயை எடுத்து கட்டிலருகே தரையில் விரித்து, அதில் அமர்ந்தாள். தலையிலிருந்து கொய்யை விடுவித்து ஒரு முறை விரல்களால் கோதிக் கொண்டாள்.

"மூண்டாவது பிள்ளையும் பிறக்குது. இனித்தான் கட்டு செட்டா இருக்க வேணும். பொம்பிளைப் பிள்ளைதான் பிறக்கும். கண்டபடி காசைச் செலவழிக்காம சேத்து வைச்சா பிறகு ரோட்டில நிக்க வேண்டிவராது." சேலையை முழங்கால்வரை இழுத்து, கைகளால் கால்களை 'சுய மஸாஜ்' செய்து கொண்டே அம்மா கதைத்துக் கொண்டிருக்க, தவமணி அதேநிலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யில் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அந்த நாளையைப் போல இப்ப ஒண்டுமே இல்லை. எல்லாமே விலை.சாமான்சக்கட்டுகள் விலையேறிப் போச்சு.வீடு,வளவுகள் நைச்சுப் பாக்கேலாத விலை.முழுச் சீவியமுமே விலை கூடிப் போச்சு. இதோட சேந்து மாப்பிளையளின்ரை விலையும் கூடிப் போச்சு"

இன்னும் பிறக்காத உயிரின் வாழ்க்கை,அந்த உயிருக்குரியஉடம்பு பெண்ணாக இருக்கலாம் என்று நம்பப்பட்டு இப்போதே நிர்மாணிக்கப் பட ஆரம்பித்துவிட்டது.வெளிச் சூழலுக்கேற்ப அந்த சீவன் வாழலாம் என்றில்லாமல் வெளிச் சூழலுக்கேற்ப அந்த சீவனை 'என்ன செய்வது' என்று ஆலோசிக்கப்படுகிறது.இதுதான் வழமை,இது இப்படித்தான் என்பதுபோல் பழைய அம்மா சொல்லிக் கொண்டிருக்க,புது அம்மா கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அவரிட்டச் சொல்லிச் செலவுகளைக் குறைக்கச் சொல்லு. படங்கள் பாக்கிறதை குறையுங்கோ.கடலுக்குத்தானே எண்டு போட்டு மணியத்தின்ரை கடையில சாமானுகளை வேண்டுறது.அவனென்னடாவெண்டா கொப்பி முழுக்க தன்ரை விருப்பப்படி சைவருகளைப் போட்டுக் கூட்டிக் கணக்கை முடிக்கிறான்.இப்பிடி அநியாயமாய் போற செலவுகளைக் குறைக் கப் பாக்க வேணும்"

அம்மா இன்னும் கைகளால் அழுத்திக் கொண்டிருக்க,வாய்அவளுடன் சம்பந்தப்படாத உறுப்பு போல் தனியாகக் கதைத்துக் கொண்டிருந்தது.ஓய்வை குறைவாகவே எடுத்தது.

தவமணியின் முன்னைய எண்ணங்கள் முற்றாக அழிக்கப்பட்டு புதிய எண்ணங்கள் உருவாகின.

பிறப்பது பெண்ணானால் ....

'மணியத்தாற்றை கடையை நிப்பாட்டத்தான் வேணும்.வேற என்ன செலவுகளைக் குறைக்கலாம்?ராசம்மான்ரை சீட்டிலயும் சேந்து போட வேணும்'

பொருளாதாரம்.

அதுவே அடியாய்,அத்திவாரமாய் இருக்க யோசனைகள் அல்லது திட்டங்கள் மேலே மேலே அடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

'ரெண்டு குமருகளைக் கரை சேக்கிறதெண்டா லேசுப்பட்ட அலுவலே?அவளுக்கு செவ்வாய் குற்றம்.இவளுக்கு என்ன குற்றம் வந்து சேருமோ?படிப்புகள் எப்பிடிப் போகுமோ?என்னண்டு எல்லாத்தையும்முடி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்கப் போறேமோ?'

அம்மா இன்னமும் கால்களை அமுத்திக் கொண்டே "முந்தியை ப்போல சகோதரங்கள் வந்து நிண்ட உடன காசை எடுத்து நீட்ட வேண் டாமெண்டு அவருக்குச் சொல்லு.குடுத்து காணும்.ரெண்டு பெட்டையள் வீட்டில இருக்குதெண்டதை நினைப்பு வைச்சுக் கொண்டு இனியாவது காசை க்கணக்குப் பாத்து தானஞ் செய்யச் சொல்லு"என்று தனது நீண்டநாள் மனக்குறையை சமயம் பார்த்து ஓதினாள்.

இரவு வந்திருந்தது.பக்கத்து வாட்டுகள் மெல்ல மெல்ல அட ங்கி பின்னர் மௌன இருளாகின.பாதையில் வாகனங்களின் இரைவு இப் போது மெல்லியமாக இருந்தது.

அம்மா இன்னும் படுக்கத் தயாராகவில்லை.தவமணியும் கட்டி லில் படுக்கை நிலைக்கு மீண்டிருந்தாலும் உறக்கமாகவில்லை.

"நீயும் பொறுப்பாய் நடக்கப் பார்.வீட்டிலயும்,புருசனில யும் கவனமாயிருக்க வேணும்.பொம்பிளையள் அக்கறையில்லாம இருந்தா எல்லாம் நாசமாய் போம்.பெட்டையளை வளக்கிற வளப்பிலதான் பிறகு கலியாணம்,காத்தியளைப் பற்றி யோசிக்கலாம்"

'கலியாணம்,காத்தி'

பெண்பிள்ளையாக இருக்கலாம் என்பதில் அப்போதே பொரு ளாதாரம் சரி பார்க்கப்பட்டு,வாழ்க்கை என்பது திருமணம் என்ற முற்று ப்புள்ளியல் முடிந்தது.அந்த முற்றுப்புள்ளியைச் சுற்றியே கவலைகள்,பொறு ப்புகள் தூக்கி வைக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

தவமணி தான் மகளாக இருக்கையில் பட்டதை மறந்து,வரப் போகும் மகளுக்காக கற்பனைக் கவலைகளில் மூழ்கினாள்.பெண்ணாக இருந்து தான்பட்ட சிரமங்கள் அவளுக்கு மறந்து போய்,அந்தச் சிரமங்கள் கட மைகள் என்ற பெயரில் மறுபதிப்புச் செய்யப்பட்டன.மகளை எப்படிபெண் ணாகவே உருவாக்குவதென்பதை கடமைகள் சரியாக அறிவுறுத்தின.

'ஆம்பிளைப் பிள்ளையளை அதுகளின்ரை பாட்டில வளர விட்டி டலாம்.ஆனா பொம்பிளைப் பிள்ளையளை வளக்கேக்க கவனமாயிருக்கவே ணும்.நல்ல ஊட்டமாய் வளக்க வேணும்.பொருத்தமான வடிவான சட் டையள் போட வேணும்.சங்கீதம் அல்லது டான்ஸ் படிப்பிச்சா நல்லாயி ருக்கும்.சின்ன வயசிலயே குசினிக்க வைச்சு சமைக்கப் பழக்கினத்தான் பிறகு கலியாணம் எண்டு வரேக்க பிரச்சினையள் இல்லாம இருக்கும்.பெட் டைவாயாடியாய் இருப்பாளோ?அடக்கமாய் இருப்பாளோ?

(தொடர்ச்சி....27ம்பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையின் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு!

ஆணுக்குப் பெண் சரிநிகர் என்று உலகம் எங்கிலுமுள்ள பெண்கள் குரல் எழுப்ப இன்று முனைந்துள்ளனர். ஆனால் இன்னும் ஆண், பெண் என்ற பாகுபாடு மட்டும் நின்று, நிலைத்திருப்பதை மறுக்க எவராலும் முடியாது.

உடல், மன, இயற்கை வேறுபாடுகளைக் காரணம் காட்டி இவை, இதை, இன்னவற்றையென பெண்களுக்குரிய தொழில்களாக வகுத்து "மெல்லியலாளர்" என்று பெண்களை அடக்கி வைப்பதை இதைச் சமூகம் இன்றும் நிறுத்தவில்லை. இந்தப் பணிப் பாகுபாட்டை ஒரு கலாசாரமாகவே வளர்த்து வந்திருக்கிறது நமது சமுதாயம்.

"அந்தப் பஞ்சை மகளிரெல்லாம்
துன்பப்பட்டு மடிந்து,
மடிந்து, மடிந்தொரு
துஞ்சமும் இல்லாதே
அவர் சாகும் வழக்கத்தை
இந்தக் கணத்தினில்
மிஞ்ச விடலாமோ."

என்று பாரதி அன்று கவலைப்பட்டான். அந்தக் கவலை இன்றும் நிலைத்திருக்கின்ற நிலைமை மிகக் கொடுமையானது.

இன்று இலங்கையில் உள்ள ஜனத்தொகையில் சுமார் 50 சதவீதத்தினர் பெண்களாவர். பெண் கல்வியில் ஆசியாவில் முன்னணி வகிக்கும் ஒரு இலங்கையாகும்

கல்வித் துறையில் பெண்கள் மேம்பட்டு இருந்தாலும் கூட பெண்கள் என்ற ஒரே காரணத்துக்காக சில துறைகளில் ஈடுபடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சில பணிகளை ஆற்றவல்லவர்கள் ஆடவர்கள் எனவும், வேறு சில பணிகளை மாட்சியுடன் செய்வர் மகளிரே எனவும் பணிப் பாகுபாடு நிலவுகிறது.

இதற்கு மாறுபட்டு எல்லாப் பணிகளும் இருவராலும் பங்கு போட்டுச் செய்யப்படும் சந்தர்ப்பங்களும் உள்ளன. ஆனால் இதற்குரிய வாய்ப்புக்கள் மிகக் குறைவானவை.

பெண்களுக்குரிய கடமைகள் என சிலவற்றை ஒதுக்கி வைத்து அவற்றில் பிரதானமானதும், முதலானதும் குழந்தைப் பராமரிப்பும், குடும்பக் கடமைகளும் என்று வகுத்திருப்பதும் பெண்கள் இவற்றுக்கு மட்டுமே உதவுவோர்கள் என்று மேலட்டை ஒட்டி விற்பனை செய்வதாக உள்ளது. அதே சமயத்தில் ஓர் ஆணின் கடமையானது பொருளாதார நோக்கில் மட்டுமே கணிக்கப்படுவது. எட்டு மணி நேர வேலைப் பொறுப்புகளுடன் அவனது கடமை முடிந்து விடுகிறது. மகப்பேறு ஒன்றைத் தவிர வேறெதையும் பாலின அடிப்படையில் பிரிப்பதற்கு அறிவுபூர்வமான சான்று அதற்கு இல்லை.

ஆனால் அன்று அடுப்பங்கரை, வயல்வேலை, மந்தை மேய்ப்பதில் ஈடுபட்டிருந்த பெண்கள் முதல் இன்று நவீன தொழிற் சந்தையில் ஸ்டெனோவாகவும், வேறு பல பணிகளிலும் ஈடுபட்டு வரும் பெண்கள் அனைவருமே இவர்கள் இன்ன பணிக்கு மட்டுமே உரியவர்கள் என்ற அடையாள அட்டையுடன் தான் தொழில் சந்தைக்குள் தள்ளப்படுகிறார்கள். பொருளாதார நோக்கில் பெரும்பான்மைப் பொறுப்புக்கள், அதிக அங்கீகாரம் பெற்ற பதவிகளில் ஆண்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் சில குறிப்பிட்ட துறைகள், தவிர ஏனையவற்றில் பெண்களின் பங்கு இன்றும் மிகக் குறைவாகவே உள்ளது.

இன்று இலங்கையில் தொழிலாளர்களில் சுமார் 45 சதவீதத்தினர் பெண்களாகவே உள்ளனர் என்று மத்திய வங்கி அறிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன. தற்போதுள்ள பட்டதாரிகளிலும் பெண்களின் எண்ணிக்கை ஆண்களை விட அதிகமாகவே உள்ளது. இவர்களுள் ஆசிரியப் பணிகளில் ஈடுபட்டு இருப்பவர்கள் சுமார் 52 சதவீதத்தினர். ஏனைய உயர் பதவிகளில் இருப்பவர்கள் சுமார் ஒரு சதவீதத்தினர் என்பது புள்ளி விபரங்களின் கணிப்பாகும். அப்படியானால் ஆசிரியப் பணி பெண்களுக்கு அதிக அளவில் ஒதுக்கப்படும் பணியா என்பதே இங்கு எழும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காரணமாக அவர்களின் பொறுமை, மென்மை, பெண்மை என அடுக்கடுக்காக அவர்களின் குணங்களை மிகைப்படுத்திக் கூறி வந்திருக்கிறது இந்தச் சமுதாயம். இவை ஏன் அந்த ஆண்களுக்கு இல்லாமல் போயின என்பதே இங்கு பிரச்சினை.

இன்று விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மற்றும் மீன்பிடி போன்ற இதர தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்கள் 62 சதவீதத்தினர் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது ஆண்களை விட 15 சதவீதத்தால் அதிகமாகும். இது போல சமூக சேவைகளில் ஆண்களை விட 4 சதவீதப் பெண்கள் அதிகமாக ஈடுபடுகின்றனர். இந்த உண்மைகள் மெய்வருந்தும் தொழில்களைச் செய்வதில் ஆண்கள் பின்வாங்குகின்றனர் என்பதையே உணர்த்துகின்றன.

இலங்கை நிர்வாகச் சேவைகளில் முதல்தர ஊழியர்கள் வகையில் உள்ள பெண்கள் சுமார் 4% என்று கணக்கிட்டுள்ளனர். கல்விச் சேவைகளின் இந்தத் தரத்துக்கு பூச்சிய பாகம். பொறுப்பான நிர்வாகங்களை ஆற்றும் திறமை பெண்களுக்கு இல்லையா? என இது எண்ண வைக்கிறது. பல்கலைக்கழகங்களில் ஆசிரியப் பணியாற்றும் பெண்கள் சுமார் 25 சதவீதத்தினரே. அதிக

... இலங்கையில் இருந்து எண்ணெய் வளமிக்க நாடுகளுக்குப் பணியாற்றச் செல்லும் பெண்களின் தொகை வேறெங்கும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது.

வெளிநாட்டுப் பணத்தை ஈட்டித் தருவதில் இந்தப் பெண்களின் பங்கு இன்றியமையாததாகும். ஆனால் இந்தப் பெண்களில் பலர் அங்கு வீட்டு வேலைகளுக்கும், குழந்தைப் பராமரிப்பும், வேறுபல உடல் உழைப்பு பணிகளுக்குமே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நிர்வாகம் மற்றும் அது தொடர்பான தொழில் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை.

நமது அரசியல் யாப்பின்படி 1931 முதல் வாக்குரிமை பெண்களுக்கு வழங்கப்பட்டு வந்துள்ளது. அரசியல் தலைமைத்துவமும் பெண்களுக்கு வாய்த்திருக்கின்றது கண்கூடு. அரசியல் கட்சிகள் பலவற்றில் பெண்கள் பிரிவுகள் இருந்தாலும் கூட உயர்மட்ட அளவில் அவர்களின் பங்கேற்பு மிகக் குறைவானதாக இதுவரை சுமார் பதினைந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி நிர்வாகத்தில் 35 சதவீதத்தினரே இருந்திருக்கின்றனர்.

வெகுசனத் தொடர்பு துறையான பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி மற்றும் சினிமா துறைகளில்

... அழகுப் பொருட்களாகக் காட்டும் பெண்மையைத் தவிர திரைப்படங்களின் ஆக்கத்துக்கு காரணமாக அறிவுபூர்வமான பெண்களைக் காண்பது அரிதாக உள்ளது.

மற்ற ஊடகங்களில் உயர்மட்ட அளவில் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவானதாகும். விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய அளவில் உள்ள இந்தப் பெண்களின் எண்ணிக்கை மொத்த தொழில் புரியும் பெண்களின் சதவீதத்துடன் ஒப்பிட மிகக் குறைவானதாகும். வெகுசனத் தொடர்பு பணிகளில் உள்ள இரவு பகல் பாராது பணியாற்ற வேண்டிய தன்மை, அலைச்சல் போன்றவை காரணமாகக் கூறப்பட்டு இந்தப் பணிப்பாகுபாடு நியாயப்படுத்தப்படுகிறது. சமுதாயக் கலாசார நிர்ப்பந்தங்கள் பெண்களை இத்துறைகளில் வெற்றிகரமாக ஈடுபட விடுவதில்லை என்பதே உண்மையாகும். விளம்பரத் துறைகளில் பணியாற்றும் பெண்கள் அலங்காரப் பதுமைகளாக இருப்பதே வியாபார ரீதியான வெற்றியைத் தருவதாக உள்ளது. அவர்களின் அறிவாற்றலுக்கு அந்த முன்னுரிமை மறுக்கப்படுகிறது.

வீட்டு எல்லைகளை விட்டு வெளியில் வந்து மகத்தான மாறுபாடுகளைக் கண்டுள்ள தொழில் சந்தையில் நுழையும் பெண்கள் இன்னும் சமூக, கலாசார கண்ணோட்டத்தில் நோக்கப்படுவது இழிவானதாகும். புதிய தொழில்களை ஏற்று பாரம்பரிய தொழில் பிரிவினைக் கருத்துக்களைப் பெண்களே முன்வரவேண்டும்.

தொழில் மயமாக்கப்பட்ட உலகில் ஏற்ற இறக்க வரிசை அடிப்படையில் பெண்கள் பணிகளில் அமர்த்தப்படும் நிலைமை மாறவேண்டும். இளமை, முதுமை அடிப்படையில் பெண்களுக்கு வழங்கப்படும் பணிப் பகிர்வு திருமணம்

# சகல துறைகளிலும் பங்காற்றும் எண்ணம் வருவது சிறந்தது

பெண்கள் பல்கலைக்கழக கல்வி பெற்றும், பெண்களின் மக்கள் தொகை பாதியளவு இருந்தும் கூட அந்த பணி பார்த்தோர் பெண்களின் தொகை குறைவாக இருப்பது வியப்பாக இருக்கிறது. அப்படியா

கூட பெண்கள் ஒரு விற்பனை இலக்காகவும், வியாபார உத்தியாகவுமே பயன்படுத்தப்படுகிறார்கள். பெண்களுக்குரிய பத்திரிகைகளைத் தவிர்த்து பிற பத்திரிகைகள் எவற்றிலும் இதுவரை ஒரு பெண் ஆசிரி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அதிசய விளம்பரம்

ஒரு மாலைப் பொழுதில் நண்பியின் வீட்டுக்குப் போயிருந்தேன். அறையின் விளக்கு அணைக்கப்பட்டு மக்கலாக இருந்தது. கீதாவின் அப்பா, அம்மா, சகோதரர்கள் மற்றும் அக்கம் பக்கத்து வீடுகளில் இருக்கும் நண்பர்கள் பலரும் டீ.வி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நானும் இருட்டில் ஒரு ஒதுக்குப் புறமாக நின்றபடியே டீ.வி.யை நோக்கினேன். அறை கும் என்ற இருட்டாய் இருந்தபடியால் படம் நல்ல முறையில் துலங்கிக் கொண்டிருந்தது; படத்தைப் பார்த்ததும் ஒரே அதிசயமாய் இருந்தது. ஒரு பெண்ணின் கை, அது நிறைய விதவிதமான பற்றனில் செய்யப்பட்ட, குறைந்தது 10,15 சோடி தங்க வளையல்கள் இருந்தன. படம் அப்படியே சில நிமிடங்கள் ஸ்தம்பித்து நின்றது. நானும் வைத்த கண் வாங்காமல் உற்று நோக்கியபடியே நின்றேன். ஏதும் விளம்பரங்கள் காட்டுகிறார்களோ? என்றும் சற்று சிந்தித்தேன். அடுத்து கழுத்துக்குக் கீழே மார்பு வரை காட்டப்பட்டது. சில நிமிடங்களுக்கு மீண்டும் படம் ஸ்தம்பித்துவிட்டது. பெரியதொரு தாலிக்கொடி அதில் எத்தனையோ பொற்காசுகள் ஊசலாடிக் கொண்டிருந்தன. பட்டுப்பட்டாக தங்கச்சங்கிலிகள் வெள்ளைக் கற்கள் பதித்த நெக்லஸ்... அதற்கிடையில் சங்கு மாலை ஒன்று தொங்கிக் கொண்டு இருந்தது.

என்ன ஆச்சரியம்! இது போன்ற பல படங்களைச் சுவரொட்டிகளிலும் சினிமாக்களிலும் பார்த்திருக்கிறேனே! அதில் நகைகளுக்கு விளம்பரம் செய்யும் பெண்மணியை வெவ்வேறு கோணங்களில் சித்தரித்துக் காட்டுவார்கள் அதுவா இது? காட்சி மெதுவாக நகர்ந்தது. அடடே! அது ஒரு பிறந்தநாள் கொண்டாட்ட வீடியோ நிகழ்ச்சி என்பதும் "விளம்பரப் பெண்மணி" விருந்தினராக வந்தவர்களில் ஒருத்தி என்பதும் புரிய வந்த போது மெதுவாக என்னை நானே ஏமாற்றிக் கொண்டது புரிந்தது.

– சசி கோபால் –

NEUCNRADE.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சிறுவர் களஞ்சியம்



# மேடு பள்ளம்

பாலனும் கமலனும் இணைபிரியாத சிநேகிதர்கள். பாடசாலைக்குப் போவது, விளையாடுவது, ஒன்றாகச் சேர்ந்துதான். பாலன் பாடசாலையில் படிப்பில் கெட்டிக்காரன் என்று பெயர் எடுத்தவன்; கமலன் விளையாட்டில் சுறுசுறுப்பும் விருப்பமும் கொண்டிருந்தான்.

இதற்கு காரணமும் உள்ளது. கமலனின் பெற்றோர் அவனது படிப்பில் கவனம் எடுக்கவில்லை. பாடசாலை சிறுவர்கள் விளையாட்டுக்கு வருமாறு அழைத்தால், எந்தத்தடையுமின்றி மைதானத்துக்கு ஓடிவிடுவான். பெற்றோர் அவனைக் கவனிக்காததனால், அவனது விடயத்தில் அவனே இறுதி முடிவுகளை எடுத்துக் கொள்வான். அவனது பெற்றோர் படிப்பு விடயத்தில் அனுபவம் குறைந்தவர்கள். இதனால் கமலன் என்ன படிக்கிறான், பாடசாலையில் யாது செய்கிறான், பாடசாலை அறிக்கை எவ்வாறு உள்ளது என்பதனை பார்க்காமல், தாங்களும் தங்கள் தொழிலுமாக உள்ளார்கள்.

அதுமட்டுமல்லாமல் அவனுக்கு வயது குறைந்தவர்களாக நான்கு சகோதரர்கள் இருந்தார்கள். அவனது அம்மா அவர்களைக் கவனிப்பதனால் ஓய்வே கிடைப்பதில்லை.

ஆனால் பெற்றோர் கட்டளைப்படி நடக்கும் பாலன் மாலை ஆறு மணியாகியதும் புத்தகத்தை எடுத்து படிக்க வேண்டும்; ஒழுங்காகப் பாடசாலை செல்ல வேண்டும்; பாடசாலை அறிக்கையை அவர்களுக்கு காட்ட வேண்டும். ஓய்வு நேரத்தில் விளையாட்டு! பாலன் பாடசாலையில் முதலாம் பிள்ளை!

கமலனை பாலன் எத்தனையோ தடவை தன்னுடன் வீட்டுக்கு வந்து ஒன்றாகப் படிக்குமாறு கேட்டிருக்கிறான். ஒருநாள் படிக்க வருவான் அடுத்தநாள் இல்லை... ஏன் என்று கேட்டால், கடைக்குப் போனதாகவும், ஆசுபத்திரிக்குப் போனதாகவும் காரணம் காட்டுவான். பெற்றோர் அவனை அங்கு இங்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போகும்படி தங்களது வேலைகளை பகிர்ந்து கொடுத்திருந்தார்கள்.

இருவருடங்கள் கடந்தன. வகுப்பேற்ற பரீட்சைகளில் சித்தியடைந்து இரு வகுப்புகள் முன்னேறிவிட்டான் பாலன். ஆனால் இவ்விரு பரீட்சைகளிலும் கோட்டை விட்டுவிட்டான். ஒரு நாள் பாடசாலை செல்லும்போது பாலன், கமலனை வீதியில் கண்டான். கமலன் கொஞ்சநாட்களாக பாடசாலை வராதது பாலனுக்கு ஞாபகம் வந்தது.

" கொஞ்ச நாட்களாக பாடசாலை வரவில்லையே, ஏதும் சுகமில்லையா?". பரிதாபத்துடன் கமலனை பாலன் விசாரித்தான்.

"அப்படி ஒன்றுமில்லை, படிப்புல அக்கறையில்லையென்டு வீட்டு வேலைகளை கவனிக்கச் சொல்லி, பாடசாலைக்கு போக வேண்டாமென்று அப்பா சொல்லி விட்டார்.." என்றான். கமலன் தலையைக் குனிந்தபடி.

"அப்படியா!... இப்போ எங்கே போகிறாய்? — பாலன்

"விஜயகாந்த்நடிச்ச புதுப்படம் வந்திருக்காம் அதுதான், வீடியோ காரரிட்ட 'கொப்பி' வாங்கப் போறன்" — கமலன்

"அப்பசரி, போயிட்டு வாறன்... பள்ளிக்கு நேரமாகுது" — அவசரமாக பாலன் நகரும்போது, கமலனை நினைத்து கவலை கொண்டான்.

கமலனின் இந்நிலைக்கு காரணமான அவனது பெற்றோரை கண்டித்த பாலனின் மனம், "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பதுபோல எண்ணில் அடங்காத வேலைப்பளுவையும் கொடுத்து பொறுப்பில்லாமல் தங்களுக்கு நலமான சினிமா மோகத்தையும் தூண்டிவிட்டதை உணர்ந்தது.

— சதிதரன் —

www.tamilarangam.net

# புத்தாண்டு பூத்தது

– கௌதமன் –

காகித வாழ்க்கையின் உறுப்பினர்
கசங்கிய சிநேகிதங்களின் பங்காளர்
இருண்ட யுக வெள்ளோட்டத்தில்
மருண்ட விழியுடன் காத்திருக்க
கசங்கியவையும் கசிந்தவையும்
புத்துணர்வு பெற்றிடவே
புத்தாண்டு இனிதே பூத்தது!

களத்தில் மைந்தர் மாய்ந்தது
காவியத்தின் நாயகர்களாக உணர்வு
தாரம் இழந்து தனியானது
தாரிகையின் இல்லறத்துக்கு மறுதலிப்பு
மைந்தனையும் துணைவனையும்
நினைவுகளை மீள் மீட்டிடவே
புத்தாண்டு நாதமாக பூத்தது!

மருத்து நீபதனை சிரசில் – வைத்து
தனயர்தனை ஆசிர்வதிக்கும் மனம்,
காலவோட்டத்தில் சிக்கவிருக்கும் – காற்றூடிகளை
கடவுளின் சந்நிதானத்தில் ஒப்படைக்கும்!
எதிர்கால சிந்தனை வேகம்
எளிதாய் யாருக்கும் புரிய
புத்தாண்டு விரைவாய் பூத்தது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தண்டனை

N. நிருபா

உயர்ந்த கட்டடங்கள், இலைகளை உதிர்த்தி நின்ற வெறும் மரங்கள் கண்ணுக்கு எட்டிய தூரம்வரை பார்த்தால் முடிவே இல்லாமல் தொடர்ந்து கொண்டிருக்கும் ஆறு இவைதான் அந்த நகரத்தை அழகுபடுத்தி நின்றன.

அந்த நகரத்தின் ஒரு ஒதுக்குப் புறத்தில் அமைந்த ஐந்து மாடிகள் கொண்ட பழைய கட்டடத்தின் ஐந்தாவது மாடியிலிருந்து—

தாயார் உணவைத்தந்து தனது பசியைப் போக்குவாள் என்று நினைத்துக் காத்திருந்த குழந்தை எதுவிதமான ஏற்பாடுகளும் நடைபெறாமல் இருப்பதைக் கண்டு இனியும் பொறுப்பதற்கில்லை என அழத்தொடங்கியது.

"அ...ம்...மா"


கோடிட்ட கண்ணீரைக் கலைத்து விட்டு எழுந்து குழந்தையை நோக்கிச் சென்றாள் கிருபானந்தி.

"அழாதேயடி கண்ணே! அம்மா இன்னுங் கொஞ்ச நேரத்தில் பால் கரைத்துத் தருகிறன்" எனக் கூறியபடி குழந்தையைக் கையில் எடுத்து பிஞ்சுக் கன்னங்களில் முத்தங்களைப் பதித்துவிட்டு மீண்டும் தொட்டிலில் விட்டாள்.

"என்னெடி குழந்தையோடு செல்லமா பொழியிறு? நான் கேட்டத முதல்ல தந்துவிட்டுப் பிறகு என்னவென்டாலும் செய்" நந்தகோபால் கூறுவதைக் கேட்டும் கேட்காதவள் மாதிரிக் கிருபானந்தி குழந்தையுடன் விளையாடிக் கொண்டிருந்தாள்.

"நான் கேட்கிறது காதில் விழவில்லையா?" அவன் கேள்விக்கு இன்னும் பதில் கள் அளிக்கப்பட வில்லை. அவள் மௌனமாகவே இருந்தாள். மனைவி தன்னை அலட்சியம் செய்வது நந்தகோபாலுக்கு மேலும் கோபத்தைக் கூட்டியது. குழந்தை ஜனனியை அவளிடமிருந்து பிரித்தெடுத்து ஒரு மூலைக்குத் தள்ளிவிட்டான். அது தனக்குத் தெரிந்த ஒரே ஒரு சொல்லாகிய 'அம்மா' வை அழத்தொடங்

www.tamilarangam.net





கியது. "நீங்கள் என்ன மனிசரோ இல்லாட்டி மிருகமோ?" கிருபாநந்தி குழந்தையை நெருங்க முயலுகையில் நந்தகோபாலுவின் முரட்டுக்கரங்கள் அவளுடைய மென்மையான கூந்தலைஇமுத்துப் பிடித்து நிறுத்தின.

"என்னடி சொன்னனீ?..
மனிசரோ இல்லாட்டி
மிருகமோ?"
நான் மிருகம்தான்.



இப்போ நான் கேட்டதைத் தரப்போறியா இல்லையா?

"தரமாட்டன்"

"உனக்கு அவ்வளவு திமிரோ? [illegible] கேட்டதைத் தராமல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


எதிர்த்து என்ன பேச்சு?....” அவளின் கன்னங்களிலும் உடம்பிலும் அவனின் கரங்களும் கால்களும் விசையாக விழ கிருபானந்தியின் அழகான மெல்லிய உடம்பு காயங்களுடன் பலவீனமடைந்தது.

“எங்க கிடக்குது எண்டு செல்லெடி?”

“சொல்லமாட்டன் குழந்தைக்குச் சாப்பாடு வாங்க வேணும்” மனைவிமேல் இருந்த கோபம் இப்பொழுது குழந்தைமேல் திரும்ப அந்தப் பிஞ்சுத் தேகத்தைத் தாக்கத் தொடங்கினான் நந்தகோபால்.

“ஐயோ. குழந்தையை அடிக்காதேங்கோ. இந்தாங்க நீங்க கேட்ட காசு” தனது ஒரே ஒரு மகளான ஊர்மிளாவை இழக்க விரும்பாத கிருபானந்தி அலுமாரியிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுத்தாள்.

இருநூறு மார்க்கைப் பெற்றுக் கொண்ட சந்தோசத்தில் அவன் வெளியே போய்விட்டான். எஞ்சியிருந்த மூன்று கரண்டிமாவில் ஒன்றரையை இரவுக்கு வைத்துவிட்டு மிகுதியைக் கரைத்துக் குழந்தைக்குக் கொடுத்தாள் கிருபானந்தி. அவளுக்கும் பசித்தது. கண்கள் சமையல் அறையின் ஒவ்வொரு இடங்களையும் ஆராய்ந்தபோது 'அலிடியில் அயபதி ஒன்பது பெனிக்குக்கு வாங்கப்பட்ட பாணில் இரண்டு துண்டுகள் தென்பட்டன. அவற்றைச் சாப்பிட்டு காற்பசியைப் போக்கிக் கொண்டாள்.

உணவுவகைகள் மிகவும் மலிவாகக் கிடைக்கும் இந்த ஜேர்மனியில்கூட அவள் பசியை முழுமையாகப் போக்கமுடியவில்லை. இரக்கமே இல்லாத குடிகாரக் கணவன். அவன் ஒருநாளில் அவளுக்குக் கொடுக்கும் தொல்லைகள்தான் எத்தனை? இவன்தானா தன்னைக் காதலித்து மணந்துகொண்டவன் என்பதை இன்று நினைக்கையில் அவளால் நம்பமுடியவில்லைதான்! கடந்த காலங்களை எண்ணிப் பார்த்தால் நடந்தவையெல்லாம் வெறும் கனவுதானோ என எண்ணத் தோன்றும். அவள் இலங்கையில் இருந்தபோது அன்பாகக் கடிதம் எழுதியிருந்தான். கிருபானந்தி தனது கணவன் தன்மேற் கொண்ட விசுவாசத்தை என்றுமே சந்தேகித்ததில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜேர்மனிக்கு வந்து சேர்ந்தபின் தான் அவனுக்கு எல்லாமே புரியத்தொடங்கியது.
அன்பு என்று வெறும் நாடகமாடி... அவளை இங்கு வரவழைத்து...அவனுக்குக்
கிடைக்கும் சமூக உதவிப்பணத்தை எடுத்துச் சூதாடி... இவற்றை முன்னரே
கிருபானந்தி அறிந்திருப்பாளாயின் ஜேர்மன் மண்ணிலேயே காலடியெடுத்து
வைத்திருக்க மாட்டாள்.

இலங்கையில் பார்த்த நந்தகோபாலுவுக்கும் இன்று காணும் நந்த
கோபாலுவுக்குத்தான் எவ்வளவு வேறுபாடு!... அவர்கள் பரம்பரையிலேயே
இல்லாத குடிப்பழக்கம், சூதாட்டம், இன்னும் என்னென்னவோ. அந்த நகரத்தி
லுள்ள அத்தனை ஸ்பீல்ஹல்லவிலும் அவன் பாதங்கள் பட்டவைதான். எட்டு மணித்தி
யாலங்கள் கஷ்டப்பட்டு வருந்தி உழைத்த அந்தப்பணத்தை ஒரு சில நிமிடங்
களில் ஸ்பீல்ஹல் அழித்துவிடுவான். நந்தகோபாலுவின் இந்தத் திடீர் மாற்றத்
திற்கு காரணம் என்ன? புதிய சூழலா? ஜேர்மன் சட்ட கட்டுப்பாடுகளா?
சிலர் ஒரு பிழையான வழியில் செல்லும்போது மற்றவர்கள் தங்களைக் கூடாத
வர்கள் என்று நினைத்துவிட்டாலும் என்ற அச்சத்தினால் இப்படியான சாட்டுகளைக்
கூறிக் கொண்டே கெட்டுப் போகிறார்கள்! என்றுதான் கிருபானந்தி நினைத்தாள்.

அவள் கணவனுக்கு அன்பாகப் புத்தி கூறிப்பார்த்தாள். பயனேதுமில்லை.
குழந்தை ஜூலியுடன் ஒருநாளாவது அன்பாகக் கதைத்து விளையாடியிருக்கிறானா?
குழந்தைமேல் அவனுக்கு ஒரு துளிகூடப் பாசமில்லை. ஆனால் அவள் பிறந்தவுடன்
கொடுத்த ஐயாயிரம் மார்க்கைமட்டும் மகிழ்ச்சியோடு ஏற்றுவிட்டான்.

கொஞ்சமாவது கிருபானந்தி மேல் இருந்த அன்பும் மாற்றீனா வந்தபின்
மறைந்துபோய்விட்டது. மாற்றீனா என்ற பெயரை உச்சரிக்கும்போதே கிருபா
னந்திக்கு அருவருப்பான இருந்தது இவளும் ஒரு பெண்தானா என்று தனக்குள்ளேயே
கேட்டுக் கொள்வாள். ஒருநாள் நந்தகோபாலுடன் வந்த மாற்றீனா அவனுடன்
வேலைத்தளத்தில் ஒன்றாக வேலைசெய்யும் நண்பி என்றே அறிமுகப்படுத்தப்பட்டாள்.
சிறிது காலத்தின்பின் காதலியாகி, இப்போது வாரத்தில் மூன்று, அல்லது நான்கு
நாட்கள் மாற்றீனா வீட்டில் அவன் தங்குவது சாதாரணமாகிவிட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாற்ரீஷ ஜேர்மன் பெண். ஏற்கனவே திருமணமாகி ஒரு குழந்தைக்குத் தாய். கணவனை விவாகரத்துப் பெற்றவள். நந்தகோபாலனைப் போல கிருபானந்தியாலும் வேறு ஒரு ஆடவனுடன் பழக்கம் வைத்திருக்கத் தெரியாதா என்ன? எந்தத்தமிழ்ப்பெண்ணுமே விரும்பமாட்டாள். நந்தகோபால் மனைவியையும் வெறுத்து மாற்ரீஷவையும் மறந்து முன்னுள்ள முறையாக தமிழ்ப்பெண் ஒருத்தியை மணக்க விரும்பினாற்கூட அவனை மணந்து கொள்ள எத்தனையோ பெண்கள் தயாராக இருக்கிறார்கள். மக்களும் அவனை வாழ்த்துவார்கள். அதே போல் கிருபானந்தி செய்யமுற்பட்டால்? ஒருவன் முன்வந்து அவளை ஏற்றுக் கொள்வானா? மக்கள் அவளுக்குப் பட்டங்கள் சூட்டி வீதியில் நிற்கவைத்துச் சிரிப்பார்கள். இன்னும் கிருபானந்தி பொறுத்திருப்பது ஏன்? தனது கணவன் திருந்துவான் என்ற நம்பிக்கையில்தான். பெண்களே தங்களை அடிமைப்படுத்திக் கொள்கிறார்கள். அதை உணர்ந்துகொள்ளாமலேயே சிலர் செயற்பட்டு வருகிறார்கள். அந்தப் பெண்களில் கிருபானந்தியும் ஒருத்தியென்றுதான் கூறவேண்டும்.

அவர்களுடைய மணவாழ்வில் ஆறுமாதங்கள் மட்டுமே மகிழ்ச்சியாகக் கழிந்தன. பின்னர் அவர்களுக்கிடையில் கருத்துமுரண்பாடுகள் ஏற்படுவதுண்டு. தன்னுடைய கணவன்தானே என்று கிருபானந்தி விட்டுக்கொடுத்து வாழ்க்கையை இனிமையாக்கிக் கொண்டாள். தம்பதிகளில் யாராவது ஒருவருக்கு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருக்குமானால் குடும்பத்தில் பிரச்சினையே இருக்காது.

இரவு பன்னிரண்டுமணிவரை கணவனுக்காகக் காத்திருந்து விட்டுப் பின்னர் தூங்கிவிட்டாள். அவன் நிச்சயமாக மாற்ரீஷ வீட்டுக்குத்தான் சென்றிருப்பான் என்பதும் அவளுக்குத் தெரியும்.

மறுநாட்காலை நந்தகோபால் மாற்ரீஷவுடன் வந்திருந்தான். வந்ததும் வராததுமாக அவன்கூறிய வார்த்தைகள் கிருபானந்தியை சோகத்தில் ஆழ்த்தி விட்டது.

"உன்னை விவாகரத்துச் செய்துவிட்டு மாற்ரீஷவை இரண்டாம் தாரமாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மணந்து கொள்ளப் போறன்" பாரதூரமான விடயத்தை மிகவும் சாதாரண மாகச் சொன்னான். கணவன் குடிமயக்கத்தில் உளறுகிறானோ என்றுதான் கிருபானந்தி நினைத்தாள். ஆனால் அவன் நிதானமாகவே மீண்டும் சொன்னான். கிருபானந்தி அதிர்ந்து போனாள்.

"நான் என்ன தவறுசெய்தேன்? உங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லையா? சமைத்துத்தரவில்லையா? உடுப்புத்தோய்த்துத் தரவில்லையா? நீங்கள் மாற்றீனாவுடன் பழகுவதைப்பற்றி ஒரு வார்த்தையாவது கேட்டிருக்கி றேனா? அவள் உணர்ச்சிகளை அடக்கமுடியாமல் அழுதுகொண்டே கேட்டாள்.

"சமைத்துத் தந்தால் மட்டும் போதுமா? நேற்று லோயரிடம் இருந்து வந்த கடிதத்தைப் படித்தனியா?"

"லோயரின் கடிதத்திற்கும் நீங்கள் என்னை விவாகரத்துச் செய்து கொள்வதற்கும் என்ன சம்பந்தம்?"

"எங்களுடைய கேஸ் ஏற்றுக்கொள்ளப்படவில்லையாம். நான் மாற்றீனா வை மணந்து கொண்டால் 'காட்' கிடைக்குமெடி"

அவளுக்கு இப்பொழுதுதான் எல்லாமே புரிந்தது. 'காட்' என்ற விலைகொடுத்து வாங்க முடியாத அந்தப் பொருளை அவளால் கொடுக்க முடியாதுதான். கிருபானந்தி எவ்வளவோ இரங்கிப் பார்த்தாள். அவன் தன் முடிவிலிருந்து மாறுவதாக இல்லை மணி இரவு பன்னிரண்டைத் தாண்டிக் கொண் டிருந்தது. கிருபானந்தி இன்னும் தூங்கவில்லை. அவள் விழிகள் மூட மறுத்தன. நந்தகோபால் கூறிய வார்த்தைகள் அவள் செவிகளில் கேட்டுக்கொண்டே இருந்தன. என்ன செய்யலாம்? இந்தக் கேள்வியைத்தான் அவள் திரும்பத்திரும்ப மனதுக்குள் கேட்டுக்கொண்டிருந்தாள்.

மனதாலோ அல்லது வேறு விதத்திலோ நான் அவருக்குத் துரோகம் செய்யவில்லை. தான் தமிழன் என்பதை மறந்துவிட்டாரா? ஒரு குழந்தைக்குத் தகப்பனாகிய பின்னரும் மறுமணம் செய்து கொள்ளப் போகிறாராம். அதுவும் அன்னிய நாட்டில் நிரந்தரமாக வாழ்வதற்காக வேண்டிய 'காட்' டுக்காக...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


என் உள்ளத்தையே அவரிடம் கொடுத்திருப்பதை அவர் உணரவில்லையா? ஆண்களே இப்படித்தான். உள்ளத்தில் அன்பு பாசம் எதுவுமே இல்லாதவர்கள். இவர்களுக்கு இதயமே இல்லையா? ஒரு பெண்ணைப் புரிந்துகொள்ளும் உணர்ச்சிகள் இல்லாதவர்களா?

அன்பில்லாத கொடுமைக்கார கணவனுடன் வாழ்வதிலும் பார்க்க விவாகரத்துப் பெற்றிருப்பதே நல்லது. விவாகரத்து செய்துகொள்வது சாதாரண விடயமாக இருக்கலாம் பின்னர் வாழ்வதுதானே கடினம். என்னையும் என் குழந்தையையும் ஜேர்மன் அரசாங்கம் காப்பாற்றும். அவர் பிரிவை என் உள்ளம் தாங்கினாலும் தாங்கும். மக்களின் கேலிச் சிரிப்புக்களையும் கட்டுக்கதைகளையும் என்னால் தாங்கிக் கொள்ள முடியுமா?

தாழ்ந்து கிடக்கும் இந்தச் சமுதாயம் ஒரு சீருக்கு வரும்வரை நான் எடுக்கப் போகும் முடிவே நந்தகோபால் போன்ற ஆண்களுக்கு சிறந்த தீர்ப்பாகும்! நினைவலைகள் வந்து மூளையில் மோதிமோதி ஒருவாறு ஓய்ந்தன. ஊரில் என்றால் பெற்றோர் அரவணைப்பில் அல்லது உறவினர்களுக்கோ சொல்லி துன்பத்தைக் குறைத்துக் கொள்ளலாம். ஜேர்மனியில் அவள் ஒரு அநாதைதானே.

கிருபானந்தி இறுதியாக உறுதியாக முடிவொன்றை எடுத்துக்கொண்டாள். நந்தகோபால் நிறையப் பட்டாசுகள் வாங்கிவந்தான். நாளை புதுவருடம் அதாவது எண்பத்தி ஒன்பதாம் ஆண்டு பிறக்கப்போகிறது. மாற்றீனுவை மணந்து கொள்ளப் போகிறேன் என்ற ஆனந்தத்தில் அவன் முகம் வெளிப்படையாகவே தெரிந்தது. கிருபானந்தி கவலையை வெளிக்காட்டவில்லை. அவள் மனதுக்குள் அழுதுகொண்டிருந்தாள்.

இரவு பதினொருமணி ஐம்பத்தி ஆறு நிமிடங்கள். ஜனனி தூங்கிக் கொண்டிருந்தாள். கிருபானந்தியும் நந்தகோபாலவும் வீட்டின் பின்புறத்தே அமைந்த பல்கணியில் பிறக்கப்போகும் புதுவருடத்திற்காகக் காத்திருந்தனர். சந்தோசக் குரல்களாக ஆங்காங்கே வெடிச்சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. நந்தகோபாலன் பட்டாசுகள் கொளுத்துவதற்குத் தயாராகத் தீப்பெட்டியைக்

www.tamilarangam.net

கையில் வைத்திருந்தான். சேர்ச் மணிக்கூட்டில் இரண்டுகம்பிகளும் பன்னிரண்டில் ஒன்றாகச் சங்கமித்தபோது 'பட..பட..' என்று பட்டாசுகள் வெடித்தன. சில மேலே வந்து காற்றோடு கலந்து போயின. நகரெங்கும் ஒரே அமர்க் களம். அட்டகாச வானங்கள் சுழன்று வேடிக்கை காட்ட நந்தகோபால் பார் வையைக் கீழ் நோக்கி ஓட விட்டான்.

கிருபானந்தி திடீரென்று சிந்தித்தாள். நந்தகோபால் போன்ற ஆண்கள் இந்த உலகத்தில் வாழவே கூடாது. இவனுக்கு என்னைப் போன்ற பெண்ணால் தான் தண்டனை அளிக்கப்பட வேண்டும். அவரின் உள்ளத்தில் எழுந்த ஆவேசம் கைகளில் மாற அவளின் தோள்களைப் பற்றி ஒரேயொரு தள்ளு தள்ளினாள். பட்டாசுச் சத்தங்களையும் மீறி நந்தகோபால் அலறியது கிருபானந்திக்குக் கேட்டது.

புது ஆண்டின் முதலாம் மாதம் முதற்தேதியின் விசேட செய்தியாக பல்கனியில் வான வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நந்தகோபால் தவறி விழுந்து மரணம் என்று பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதை கிருபானந்தி யும் படித்தாள்.

தனக்கு மட்டும் தெரிந்த அந்த இரகசியம், ,பரமரகசியமாக இருக்கக் கூடாது, பகிரங்கப் படுத்தப்பட வேண்டும். தான் கொடுத்த தண்டனை, பெண்களின் உரிமை பறிபோகும் ஒரு சில நிகழ்வுகளுக்கு பதிலடி; இதில் இருந்து பெறப்படும் தீர்ப்பு பொறுப்பற்ற ஆண்வர்க்கத்தையும் சிந்திக்க வைக்க வேண் டும்!... இதற்காக அவள் பொலிஸில் சரணாகதி அடைந்தாள்.

. . . . . . . . . . . .



"ஊர்ப் பிரச்சனையைச் சொன்னா கேட் காதது போல போகிறீரே...செவிடா?"

"எங்கேயாவது காசு கொடுக்கிறதாக சொல்லிப் பாரும்!... நல்லாவே கேட்கும்!"

– சங்கீ –

www.tamilarangam.net


சித்திரா — பெண் தொடர்ச்சி.......

பிள்ளைக்கு என்ன பேர் வைக்கலாம்?'

எந்தப் பாரங்கள் தன்னை நசுக்கினவோ, நசுக்கிக் கொண்டிருக்கின்றனவோ, அதே பாரங்களை தனது மகள் மேலும் ஈவிரக்கமில்லாமல் சுமத்துவதற்காக தவமணி என்றழைக்கப்படும் தாய் தயாராகிக்கொண்டிருந்தாள். அவளுடைய அம்மாவை ஒரு ஊடகமாக்கி அவள் மூலமாக தவமணியை அப்படி ஆக்கியிருந்தது. இந்தப் பாதகச் செயலுக்கு ஒரு தாயின் கடமைகள் என்ற நாமத்தையும் சூட்டியிருந்தது.

அநியாயமாக சுமைய வைத்து ஏற்றப்பட்ட பாரத்தை தகர்க்கவைக்கும் வெடிகுண்டாக தனது வயிற்றிலிருக்கும் சிசு இருக்க வேண்டுமே என்று விரும்பாமல் பாரங்களை ஏற்றிச் செல்லும் கழுதையாக இருக்க வேண்டுமென ஒரு தாய் தன் பிள்ளையைப் பற்றிச் சிந்திக்கும் விசித்திரம் அல்லது முட்டாள்தனம் இன்னமும் சந்ததிகளினூடாகக் கடத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது.

இதற்கு விதிவிலக்காக இல்லாமல் தவமணியும் வழமையான அம்மாவாகவே யோசித்துக் கொண்டிருந்தபோது வலி ஆரம்பித்தது. முதலில் இலேசாகவும் விட்டுவிட்டுமாயிருந்த பின்னர் கடுமையாகியது.

ஓரளவுக்கு மேல் பல்லைக் கடிக்க முடியாமல் போன தவமணி "அம்மா" என்று முனக, அப்போதுதான் நித்திரையை வாங்கிக்கொண்ட அம்மா திடுக்கிட்டு விழித்து, நிலைமையைப் புரிந்து கொண்டு தாதிகளிடம் ஓட....

சில நிமிடங்களில் தவமணி பிரசவ விடுதிக்குக் கொண்டு செல்லப்பட்டாள்.

நடுச்சாமத்திற்கு கொஞ்சம் முன்னதாக பிரசவ விடுதி மறுபடி உயிர்த்துக் கொண்டது. மருத்துவர்கள் வெள்ளையுருப்புப் போட்டு, கையுறைகள் அணிந்து கொண்டு ஆயத்தமானார்கள்.

( தொடரும் )

■ பின்பற்றத்தக்க நல்வாழ்வுக் கோட்பாடுகளில் எதை விரும்புகிறீர்கள்? எதை வெறுக்கிறீர்கள்? எந்த ஒரு நல்ல கொள்கையையுமே நீங்கள் விரும்பவில்லை என்றால்... அப்புறம் உங்கள் இஷ்டம். நீங்கள் எங்கேயும் எதையும் எதிர்பார்க்காதீர்கள்.

—அகஸ்டின் ஆஃப் ஹிப்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எனக்குப் பெயர்தான் பெண்ணா?

வழமை போலவே விடிந்தவுடனே
விளக்குமாற்றைக் கையிலெடுத்து
வீடு முற்றம் பெருக்குதற்கென்றே
விதிக்கப்பட்ட அடிமையா நான்?

விடிந்து சூரியன் வெளிவரத் தொடங்கியும்
விழிகள்மூடிப் புரண்டு படுக்கும்
படுத்தபாயினைச் சுருட்டி வைக்கவும்
பழக்கப்படாத எனது சகோதரன்

சோம்பல் முறிக்கும் காலைத்தேனீர்
அத்துடன் காலை ஆகாரம்தேடல்
அனைத்து வேலையும் சுமத்தப்பட்ட
அடிமைத் தனத்தின் பிரசவிப்பா நான்?

வரையப்படாத வேலைப்பட்டியல்
வகுத்துத் தந்த வேலையிலொன்று
காலை உணவு முடிந்த பின்னாலே
பானைசட்டி உரசிக் கழுவுதல்.

இளையவர் மூத்தவர் பெற்றோர்களினது
மனதைத் துவைக்கும் உடுபுத் துவைத்தல்
பணிக்கப்படாத கட்டளையாகி
திணிக்கப்பட்ட அடிமையா நான்?

சிட்டுக்குருவிபோல் என்னுடன் பிறப்புகள்
கட்டுக்கடங்காது ஊர் சுற்றி வருவார்
இறக்கைகள் வெட்டிய பறவையைப்போலே
பறக்கும் சுதந்திரம் இழந்தவளாநான்?

தீர்மானிக்கும் உரிமையை இழந்தவள்
முடிவு எடுக்கும் தைரியம் பறிக்கப்பட்டவள்
அடிமைத்தனத்தைப் பொறுமையாய் ஏற்றவள்
எனக்கு உரிய பெயர்தான் பெண்ணா?

நன்றி: நெருப்பையும் சுடும்
நெஞ்சின் வேதனை
"செங்கனல்"

www.tamilarangam.net

அகதியின் பரிதாப முடிவு

பெப்ரவரி 19ம் திகதி ஞாயிறன்று அரசியல் தஞ்சம் கோருமுகமாக வந்த தமிழ் அகதி திரு. திருமால் திலகநாதன் பிராங்போர்ட் விமான நிலையத்தில் பரிதாபமாக இறந்தார்.

கொழும்பிலிருந்து பரிஸ் நோக்கி சென்று கொண்டிருந்த எயார் லங்காவின் திரிஸ்டார் விமானத்தில் தஞ்சம் கோரும் நோக்கத்துடன் ஒரிரு தமிழர்கள் இருப்பது தெரியவந்ததையடுத்து அபுதாபியில் வைத்து அதில் பயணம் செய்த 6 தமிழர்களின் பாஸ்போர்ட்டுக்களும் பெறப்பட்டு பரிசில் அவர்களிடம் அவை மீள ஒப்படைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்து பிராங்போர்ட் ரைன்-மைன்-விமான நிலையத்தில் இறங்கு முன்பாக அவர்களது பயணச்சீட்டுக்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

ஞாயிறு காலை 9.30 மணியளவில் விமானம் பிரங்போர்ட்டில் இறங்கிய போது இரு பயணிகள் சாதாரண வாசல் வழியாக வெளியேறி தமக்கு தஞ்சம் தரும்படி தகுதிவாய்ந்த அதிகாரிகளிடம் கேட்டனர்.

இதேவேளை எழு பயணிகள், (இவர்களில் இருவர் பெண்கள்) இறங்க முயற்சித்தபோது விமான ஊழியர்களினால் தடுக்கப்பட்டனர். ஜேர்மன் பொலிசாருடன் தொடர்பு படுத்தித்தருமாறு விடுக்கப்பட்ட அவர்களது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது.

அதன் விளைவாக இக்குழுவிலிருந்த மூன்று பேர் விமானத்தின் திறந்திருந்த சாமான்களை ஏற்றி இறக்கப்பயன்படும் பகுதிக்குச் சென்றனர். இதனூடாக ஓடுபாதையிலிருந்து கிட்டத்தட்ட 5மீற்றர் உயரமானதிலிருந்து குதித்து படுகாயமடைந்தனர். மூன்றாமவர் வாகனத்தின் குழாய்ப்பகுதியால் விழுந்ததனால் காயமடையவில்லை.

காயமடைந்த இரு தமிழரும் ஆஸ்பத்திரிக்கு விரைந்து கொண்டு செல்லப்பட்டார்கள். அங்கு 38 வயதான திருமால் திலகநாதன் ஞாயிறுமாலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காயமானார். மற்றவர் முள்ளந்தண்டு முறிவுடன் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார். அவர் அரசியல் தஞ்சம்கோரி விண்ணப்பித்துள்ளார்.

இதையடுத்து விமானத்தினுள் பிரவேசித்த பாதுகாப்புப் படையினர் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு தமிழர்களையும் கண்டு அவர்களை இறங்க விரும்புவதைக் கேட்டு அறிந்தனர். கீழே குதித்து காயமடையாது தப்பியவரும், ஏனையோரும் அரசியல் தஞ்சம்கோரி விண்ணப்பிக்க முடிந்தது.

மரணமடைந்த திரு. திருமால். திலகநாதன் இந்தியப்படைகளால் கைது செய்யப்பட்டுமிகவும் சித்திரவதைக்குள்ளானவர். வைத்திய சிகிச்சைக்காக விடுவிக்கப்பட்ட அவர் தொடர்ந்தும் அங்கு இருக்கப்பயந்தே தனது மனைவி இருபிள்ளைகளையும் பிரிந்து ஜேர்மனிக்கு தஞ்சம் கேட்டு வந்தார்.

இந்த நிகழ்ச்சி அகதிகள் விமானத்திலிருந்து இறங்கி தஞ்சம் கோருவது தடைசெய்யப்படுவதால் ஏற்படும் இழப்பை எடுத்துக் காட்டுகிறது.

இந்தப் பயம் அர்த்தமற்றதல்ல. பிராங்போர்ட் விமானநிலையத்தில் அகதிகள் வேறுநாடுகளுக்கோ, தமது சொந்த நாடுகளுக்கோ, திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள்.

இப்படி மூவரும் குதித்திராவிட்டால் எயார் லங்கா விமானம் பரிசை நோக்கி பறந்திருக்கும் ஏழு அகதிகளுக்கும் இங்கு தஞ்சம் கோரும் வாய்ப்பைக் கொடுக்காமலேயே!

– டி.கே. –

## ராட்சத டெலிவிஷன்!

நவீன டெலிவிஷன் தயாரிப்பில் ஜப்பான் முன்னணியில் இருப்பது உங்களுக்குத் தெரியும். இப்போது அங்குள்ள 'சோனி' கம்பெனி ராட்சத டெலிவிஷன்களை தயாரித்து வருகிறது.

இந்த டெலிவிஷன் செட்டின் திரையின் குறுக்களவு 45 அங்குலம் ஆகும். நாம் தற்போது பயன்படுத்தும் சாதாரண டி.வி. செட்டின் திரை 21 அங்குலம்தான்.

இந்த ராட்சத கலர் டெலிவிஷன் செட்டை பெரிய ஹால்கள் பொது இடங்களில் பயன்படுத்தலாம். இதன் விலை 75 [illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

...அடிப்படையிலேயே வழங்கப்பட வேண்டும்.

அதிகளவு பெண் கல்வி நிலை ... நம் நாட்டில் ... ஆட்சி இன்னும் சிந்தனையை ... ஏற்படுத்த ... வேலைவாய்ப்புப் பெண் ... முதன்மை வேண்டும்.

... சுற்றும் ... தாங்கள் ... நம்பிக்கையும், துணிச்ச...

## சி. எஸ். எஸ்.

...ம் வந்தால் பெண்களுக் ... தொழில்களை பெற ... காள்வதே பாதுகாப்பானது என்று ஆர்வம் காட்டும் ... மை மாறும்.

பெண்களைத் தம்முடன் பணிபுரிவதை விரும்பாத ... விக்கிரங்கள் பெண்க... பணியே சில துறைகளில் ... நிர்த்தியானதெனப் பாராட்ட... வாழ்க்கைப் போராட்டங்களை சந்திப்ப... விரும்பாது திருமணத்தை ... அடைக்கலம் தேடும் பெண் ... ள் என்றுள்ள உண்மைகளை ... வெளியே பெண்கள் ... யவேண்டும்.

இதற்கு ... தொடர்பு சாதனங்கள் "இவள் ... தான் பெண்" என்று பெண் ... பழைய யுகத்திலிருந்து ... ஆற்றுப்படுத்தும் முறையை மாற்றி பெண்ணை ஒரு உயர் சக்தியாக அறிமுகப்படுத்த முன்வர வேண்டும்.

பணியாற்றும் பெண்களுக் ... தேவையான பல உதவிகள், ... வசதி ஆதாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக சுமார் ஏழு லட்சம் பெண்கள் வாழும் இலங்கையில் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பணிபுரியும் இந்தக் காலகட்டத்தில் பணிகளில் உள்ள ஏற்றத் தாழ்வு மாற பெண்கள் தைரியத்துடனும் தன்னம்பிக்கையுடனும் தங்கள் சுயநலத்தை உணர்ந்து செயல்பட்டு தம் சொந்தக் காலில் நின்று புதிய பொருளாதார வளர்ச்சியைத் தோற்றுவிப்பது அவசியமானதென்பதை உணரவேண்டும்.

அருள்மொழி 26.2.88


ஆண்கள் விற்பனைக்கு

(சமூக நாவல்)

எழுதியவர்: பார்த்திபன்

பக்கங்கள்: 132

விலை: 5,- ஜ.எம்

மேற்கு ஜேர்மனியில் இருப்பவர்கள் தபாலில் பெற விரும்பின் 5.70 ஜ.எம் பெறுமதியான முத்திரைகளை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

SÜD-ASIEN-BÜRO
KIEFERNSTRASSE 45
5600 WUPPERTAL 2





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நமதுஇல் ஜேர்மன.

# வாசகர் கடிதம்

அட்டைப்படம் சென்ற இதழில் வித்தியாசமான முறையில் கருத்துள்ள வகையில் அமைந்திருந்தது. மார்ச்—8 மகளிர் தினத்தை மெருகூட்டிய விதத்தில் அமைந்திருந்த சித்திரங்களும் வர்ணனை செய்திகளுக்கு சிறப்பூட்டியது.

— கமலன் —

எஸ்சென்.

"சித்திரா—பெண்" தொடர்கதையில் தவமணியின் பொதுநல—சுயநலச் சிந்தனை அனுபவத்தின் விளைவை [illegible]மாக படம் பிடித்துக் காட்டுகிறது. தவமணியின் மானசீகச் சிந்தனையை பேச்சு வழக்கில் உருவகப்படுத்தியிருப்பது வாசிப்பதற்கு இடைஞ்சலை (அலுப்புந்தான்) கொடுக்கிறது. அதனை எழுத்து வழக்கில் தொடர்ந்தால் நன்றாக இருக்கும்!

— எஸ். வி —

போகும்.

"கலக்கத்தின் முடிவில்"— கதையில் இடம் பெற்ற விபரணப் படம் அழகாகச் சித்தரிக்கப்பட்டிருந்தது. கதாநாயகனின் வரலாற்றுப் பின்னணி கூடி விட்டதனால் கதை விரிந்து போய் விட்டது. கதையின் கரு பழையது; ஆனால் முடிவை சற்று வித்தியாசப்படுத்தியது கதைக்கு இரசனையாக இருந்தது.

— சிவா —

போகும்.

சிறுவர் களஞ்சியத் பகுதியின் ஆக்கங்கள் சிறுவர்களுக்கு புத்தி புகட்டக் கூடிய மாதிரியும் யாழ்ப்பாண வரலாற்றை அறியத் தருவதாகவும் உள்ளன. ஆக்கங்களின் தரத் உயர வேண்டும். அதுபோல் வேறு ஊர்களின் வரலாறுகளையும் சிறுவர் களஞ்சியத்தில் இடம் பெறச் செய்ய வேண்டும்.

— சுதா —

டோட்முண்ட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே.
ஆக்கங்களுக்கு அவற்றின் ஆக்கதாரர்களே பொறுப்பு

இச்சஞ்சிகையைத் தொடர்ந்தும் தபால் மூலம்
பெற்றுக்கொள்ள விரும்புவோர்
Pf9 தபால் தலைகளை அனுப்பி வைக்கவும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நமதுகுரல்

இச்சஞ்சிகை மூன்றாம் உலக நாடுகள் தகவல் நிலையத்தி-னரின் உதவியுடன் மாத-மொருமுறை இலவசமாக வெளியிடப்படுகிறது

ஹேர்ண- பெண்கள் வட்டம் அமைப்பின் சார்பில் வெளியிடப்படுவது.

தொடர்புகளுக்கு:

FRAUEN KREIS
INFORMATION ZENTRUM-
DRITTE WELT
OVERWEG STR 31
4690 HERNE 1.
TELEFON: 02323 496970/7

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்